**வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்**
**இலங்கை மத்திய வங்கி**

**2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2019ஆம் ஆண்டின் 01ஆம் இலக்கப் பணிப்புரைகள்**

---

**முற்கொடுப்பனவு (காசாக முற்பணம்) நியதிகளின் மூலம் மேற்கொள்ளப்பட்ட இறக்குமதிகளுக்கான கொடுப்பனவுகளின் மீது அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுவிக்கப்பட்ட பணிப்புரைகள்**

2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் (சட்டம்) பிரிவு 16 உடன் சேர்த்து வாசிக்கப்படும் பிரிவு 3இன் நியதிகளின் கீழ் முற்பணக்கொடுப்பனவு (காசாக முற்பணம்) நியதிகளின் கீழ் அத்தியாவசியமற்ற நுகர்வுப் பொருட்களின் இறக்குமதிகளுக்கான கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்காக வெளிநாட்டுச் செலாவணியை வழங்குதலை மட்டுப்படுத்தல் தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுவிக்கப்பட்ட 2018 ஒத்தோபர் 10 திகதியிடப்பட்ட 2018ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க பணிப்புரைகள் இப் பணிப்புரையின் திகதியிலிருந்து மீளப்பெறப்படுகிறது.

**பணிப்பாளர் – வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்**

**2019 மார்ச்சு 26**